நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வெள்ளத்தில் மிதக்கும் வேப்பம்பட்டு**

First Published : 08 Dec 2010 12:00:00 AM IST



வடகிழக்கு பருவமழையால் நிரம்பி வழியும் பெருமாள் பட்டு குளம்.

திருவள்ளூர், டிச. 7: கடந்த சில தினங்களாக பெய்த கன மழையால் திருவள்ளூரை அடுத்த வேப்பம்பட்டு, பெருமாள்பட்டு ஆகிய பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக திருவள்ளூர் மாவட்டத்திலும் பரவலாக நல்ல மழை பெய்தது. இதனால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் நீரால் சூழப்பட்டுள்ளது. இதில் திருவள்ளூரை அடுத்த வேப்பம்பட்டு, பெருமாள்பட்டு பகுதியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

வேப்பம்பட்டு பகுதியில் உள்ள டன்லப் நகரில் சாலை முழுவதும் நீரால் நிரம்பி குளம் போல் காணப்படுகிறது. மேலும் குடியிருப்பு பகுதிகளிலும் முழங்கால் அளவு நீர் தேங்கியுள்ளது. இதனால் மக்கள் வீட்டிலேயே முடங்கியிருக்கும் நிலை உள்ளது. அத்தியாவசியத் தேவைக்காக மட்டும் வெளியில் வரும் அப்பகுதி மிகுந்த இன்னலுக்கு ஆளாகின்றனர்.

வேப்பம்பட்டு, அதை அடுத்துள்ள பெருமாள்பட்டு பகுதிகளில் வீடுகளை சுற்றி மழை நீர் சூழ்ந்துள்ளதால் வீட்டின் சுவர்களில் மழை நீர் ஊறியுள்ளது. தரையும் குளிர்ச்சியாக இருப்பதால் குழந்தைகளுக்கு இருமல், சளித் தொல்லை ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் அப்பகுதியில் கொசுக்கள் அதிகளவு உற்பத்தியாகி இரவில் உறக்கமின்றி தவிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

வேப்பம்பட்டு ஊராட்சி மன்ற அலுவலகம் செல்லும் சாலை, பஜ்ரங் கல்லூரி சாலை உள்ளிட்ட பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. பெருமாள்பட்டில் ஆரம்ப சுகாதார நிலைய வளாகம், ஒன்றிய நடுநிலைப் பள்ளி வளாகம், மாருதி நகர், ரயில் நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழை நீர் சூழ்ந்துள்ளது.

மழை ஓய்ந்த உடனே, இப் பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் மழை நீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பு.

**தொடர் மழை: கொடைக்கானலில் காபி விவசாயம் பாதிப்பு**

First Published : 07 Dec 2010 11:36:29 AM IST

கொடைக்கானல், டிச. 6: கொடைக்கானலில் கடந்த ஒரு மாதமாக தொடர் மழை பெய்து வருவதால், காபி கொட்டை விளைச்சல் பாதிப்புக்குள்ளாகியுள்ளதை அடுத்து, விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கொடைக்கானல் கீழ்மலைப் பகுதிகளான பண்ணைக்காடு, தாண்டிக்குடி, கடுகுதடி, கே.சி.பட்டி, கும்பரையூர், சின்னூர், பெரியூர், ஊத்து, வெள்ளகெவி, பேத்துப்பாறை, வடகவுஞ்சி, பாலமலை, தாமரைக்குளம் உள்பட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் காபி பயிரிடப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு வழக்கத்துக்கு மாறாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், விளைந்த காபி கொட்டைகளை எடுக்க முடியாமல் விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர். இதனால், விவசாயக் கூலித் தொழிலாளர்களும் வேலையின்றி வருந்தி வருகின்றனர்.

இது குறித்து, ஊத்து பகுதியைச் சேர்ந்த காபி விவசாயி கருப்பையா கூறியதாவது:

கொடைக்கானலில் கடந்த ஒரு மாதமாக பெய்துவரும் மழையின் காரணமாக, விளைந்த காபி பயிரை எடுக்க முடியாமல் விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர்.

மேலும், மழை நீர் அதிகமாக செடிகளில் தேங்கியிருப்பதால், மஞ்சள் புளு மற்றும் பலவிதமான பூச்சிகள் தாக்கி, காபி பழங்கள் சேதமடைந்து வருகின்றன.

இதற்கு, பூச்சி மருந்து அடித்தாலும் மழைக் காலத்தில் எந்தவித பயனையும் தராது. மேலும், கொடைக்கானலில் பூச்சி மருந்து, உரத் தட்டுப்பாடு அதிகமாக நிலவுவதுடன், தரமான மருந்துகளும் கிடைப்பதில்லை. இதனால், விவசாயிகள் நஷ்டமடைந்துதான் வருகின்றனர்.

ஒரு ஏக்கருக்கு ஒரு டன் காபி கிடைக்கும். இங்கு தயார் செய்யப்படும் காபி, கேரளம் உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் மற்றும் மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகிறது. இந்தத் தொழிலை நம்பி நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இங்கு வசித்து வருகின்றன.

எனவே, எங்கள் பகுதியில் காபி கொட்டையை காய வைப்பதற்கும், அவற்றை அரைத்து கொடுப்பதற்கும், அரசு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்தால் உதவியாக இருக்கும். மேலும், காபி வாரியம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

**தொடர் மழையால் பாதிக்கப்பட்ட திராட்சை விவசாயம்**

First Published : 07 Dec 2010 11:33:24 AM IST

திண்டுக்கல், டிச. 6: தொடர் மழை காரணமாக திராட்சைப் பயிர்கள் அழுகிப் போனதால், விவசாயிகள் மிகவும் நஷ்டம் அடைந்துள்ளதை அடுத்து, நிவாரணம் கோரி மனு அளித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், சிறுமலை அடிவாரப் பகுதிகளான ஜாதிகவுண்டன்பட்டி, ஊத்துப்பட்டி, அமலிநகர், காமலாபுரம், பெருமாள்கோவில்பட்டி ஆகிய பகுதிகளில் சுமார் 250 ஏக்கரில் திராட்சை பயிரிடப்பட்டுள்ளன.

இவை, தற்போது நன்கு காய்த்து அறுவடைக்கு வரும் சமயத்தில் தொடர்ந்து மழை பெய்ததால், பூத்துக் குலுங்கிய திராட்சைப் பழங்கள் தண்ணீரில் நனைந்து அழுகிப் போயுள்ளன. மேலும், கொடியிலேயே பழங்கள் அழுகி வருவதால், கொசு மற்றும் ஈக்களின் தொல்லையும் அதிகரித்துள்ளது.

தற்போது, நஷ்டத்தோடு நஷ்டமாக வேலை ஆள்களை வைத்து அழுகிய திராட்சைகளை வெட்டி எறியும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து, அமலிநகர் திராட்சை விவசாயி பெர்க்மான்ஸ் கூறியதாவது:

சிறுமலை அடிவாரப் பகுதியில் விளையும் திராட்சைகளுக்கு தனிச்சுவை உண்டு.

மேலும், இப்பகுதியில் விளையும் திராட்சைகள் ஒரு வார காலம் வரை தாக்குப்பிடிப்பதால், தமிழகம் மட்டுமின்றி கேரளம் மற்றும் கர்நாடக மாநிலத்துக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

நான்கு மாதங்களுக்கு ஒருமுறை திராட்சை பயிரிடப்பட்டு வந்தாலும், தற்போது தான் திராட்சை சீசனின் உச்சகட்டமாகும். ஆனால், இந்த காலகட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், கொடிகள் தாக்குப்பிடிக்க முடியாமல் காய்களில் அழுகல் ஏற்படுகிறது.

அறுவடை செய்யும் சமயத்தில் திராட்சை பாதிக்கப்பட்டுள்ளதால், பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு லட்சக்கணக்கான ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு இழப்பீடு வழங்கவேண்டும்.

இது குறித்து, திங்கள்கிழமை வருவாய்த் துறை அமைச்சர் அலுவலகத்தில் கோரிக்கை மனு கொடுத்துள்ளதாக விவசாயி தெரிவித்தார்.

**விவசாயிகள் கவனத்துக்கு...**

First Published : 07 Dec 2010 11:56:01 AM IST

மதுரை, டிச. 6: வடகிழக்குப் பருவமழை பெய்துவரும் நிலையில், பயிர் சேத விவரம் குறித்து விவசாயிகள் தெரிவிக்குமாறு வேளாண்மை இணை இயக்குநர் ப. சங்கரலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், மதுரை மாவட்டத்தில் பெரும்பாலான கண்மாய்களில் நீர் நிரம்பியுள்ளது. மேலும், நெல் நடவு செய்யப்பட்டுள்ள வயல்களிலும் நீர் தேங்கியுள்ளது. அடுத்த சில நாள்களில், மேலும் மழை பெய்தால், மழை நீரால் நெற்பயிர் பாதிக்கும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

மழை வெள்ளத்தினால் பயிர்கள் பாதிக்கப்படுவதைக் கண்காணிக்க, மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, கட்டுப்பாட்டு அறை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது.

வெள்ளக் கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறை காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை செயல்படும். விவசாயிகள் தங்கள் பகுதிகளில் மழை வெள்ளத்தால் பயிர் சேதம் ஏற்பட்டால், உடனடியாக 0452- 2531136, 0452- 2537153 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு, தங்கள் பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் செயல்படும் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

## நாகை மாவட்டத்தில் 50 சதத்துக்கும் அதிகமான நெல் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன

First Published : 07 Dec 2010 01:56:46 PM IST

நாகப்பட்டினம், டிச. 6: நாகை மாவட்டத்தில் சுமார் 50 சதத்துக்கும் அதிகமான நெல் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன என்றார் தமிழ்நாடு மருந்து சேவைக் கழக மேலாண் இயக்குநரும், நாகை மாவட்ட வெள்ளச் சேத ஆய்வுக்கான மேற்பார்வை அதிகாரியுமான சிவ்தாஸ் மீனா.

நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டத்துக்கு உள்பட்ட வெள்ளப்பள்ளம், கோவில்பத்து, செம்போடை ஆகிய பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதங்களையும், சேதமடைந்த சாலைகளையும் சிவ்தாஸ் மீனா ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டார்.

பின்னர், நாக்குடையான் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி நிவாரண முகாமில் மக்களைச் சந்தித்து தேவைகளைக் கேட்டறிந்தார். திருக்குவளை வட்டம், எட்டுக்குடி கிராமத்தில் மழை வெள்ளத்தால் சூழப்பட்டுள்ள பகுதிகளுக்குப் படகில் சென்று பார்வையிட்டு, மீட்புப் பணிகளை விரைவுப்படுத்த அறிவுறுத்தினார். இதைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் வெள்ள நீரில் மூழ்கியுள்ள விளை நிலங்களையும், நெல் பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பையும் அவர் ஆய்வு செய்தார்.

ஆய்வுகளுக்குப் பின்னர் அவர் தெரிவித்தது:

நாகை மாவட்டத்தில் சுமார் 50 சதத்துக்கும் அதிகமான நெல் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. வெள்ள நீர் வடிந்த பின்னரே பயிர்ச் சேதத்தை முழுமையாகக் கணக்கிட இயலும். நாகை

மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதங்கள் குறித்த விரிவான விவரங்கள் அறிக்கையில் குறிப்பிடப்படும் என்றார் சிவ்தாஸ் மீனா. நாகை மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் வை. ராஜேந்திரன், பொதுப் பணித் துறை நீர்வள ஆதாரப் பிரிவு செயற்பொறியாளர் பக்தவச்சலம், நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் எஸ். ராமகிருஷ்ணன், வருவாய்க் கோட்டாட்சியர் என். சுகுமார், தீயணைப்புக் கோட்ட அலுவலர் எஸ். ஆறுமுகம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சா. இளங்கோ ஆகியோர் உடனிருந்தனர்.

**நாகுடியில் 21.6 மி.மீட்டர் மழை**

First Published : 07 Dec 2010 01:47:24 PM IST

புதுக்கோட்டை, டிச. 6: புதுக்கோட்டை மாவட்டம் நாகுடியில் அதிகபட்சமாக 21.6 மி.மீட்டர் மழை பெய்தது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8 மணி வரை முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை விவரம் (மி.மீட்டரில்):

புதுக்கோட்டை மாவட்டத்தில் அதிகபட்சமாக நாகுடியில் 21.6, பொன்னமராவதியில் 17, கீரனூர், உடையாளிபட்டியில் 1, திருமயத்தில் 15.4, காரையூரில் 13.4, விராலிமலையில் 13, இலுப்பூரில் 12.6, குடுமியான்மலையில் 10, மீமிசல், அன்னவாசல், ஆயிங்குடியில் 5.2, அரிமளம், அறந்தாங்கி, மணமேல்குடி, கட்டுமாவடியில் 5, புதுக்கோட்டை, பெருங்களூரில் 4, கீழாநிலா, ஆலங்குடியில் 3, ஆதனக்கோட்டை, கறம்பக்குடி, ஆவுடையார்கோவில், ஆதனக்கோட்டையில் 2.

**பயிர்கள் சேதம்: விவசாயிகள் கவலை**

First Published : 07 Dec 2010 02:08:34 PM IST

திருவள்ளூர், டிச. 6: திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக பெய்து வரும் கனமழையால் கடம்பத்தூர், திருவாலங்காடு ஒன்றியங்களில் அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்துப் போனதால் மின் மோட்டார் மூலம் நிலத்தில் இருந்து உறிஞ்சப்படும் நீரைக் கொண்டு விவசாயிகள் பயிரிட்டு வந்தனர். இந்த ஆண்டும் மழை வராது என்ற நம்பிக்கையில் பயிரிட்டு அறுவடை நாளுக்காக காத்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த நவம்பர் மாதம் முதல் வடகிழக்குப் பருவமழை தொடங்கி பெய்து வந்தது. இந்நிலையில் வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தாழ்வுநிலை காரணமாக தமிழகத்தின் பல பகுதிகளில் பரவலாக கனமழை பெய்து ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் திருவள்ளூர் மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால் திருவாலங்காடு, கடம்பத்தூர் ஒன்றியங்களில் பயிரிடப்பட்டு அறுவடைக்குத் தயாராக இருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் தலைசாய்ந்து, நீரில் மூழ்கி அழுகி வருகின்றன.

இதனால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர். அரசியல் மற்றும் கட்சி பாகுபாடு இல்லாமல் மாவட்ட நிர்வாகத்தினர் முறையாக சேதமடைந்துள்ள நிலங்களை ஆய்வு செய்து அனைத்து விவசாயிகளுக்கும் முறையான நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்பதே கடம்பத்தூர், திருவாலங்காடு ஒன்றிய விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**ஆட்சியர் அலுவலகத்தில் குவிந்த விவசாயிகள்**

First Published : 07 Dec 2010 03:05:19 PM IST

தருமபுரி, டிச. 6: பயிர் சேதங்களுக்கு நிவாரணம் கோரி தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 500-க்கும் மேற்பட்ட விவசாயிகள் திங்கள்கிழமை மனுக்கள் அளித்தனர்.

வாரந்தோறும் திங்கள்கிழமைகளில் நடைபெறும் மக்கள் குறைதீர் கூட்டத்தில் பல்வேறு உதவித் தொகைகள், அடிப்படை வசதிகள், கல்விக்கடன், பொருளாதாரக் கடன், தொழில் கடன், பட்டா, சிட்டா அடங்கல், குடும்பஅட்டை கோரியே மனுக்கள் வருவது வழக்கம். ஆனால், கடந்த 2 வாரமாக பயிர் சேதங்களுக்கு நிவாரணம் கோரி விவசாயிகள் கூட்டம், கூட்டமாக வந்து மனுக்கள் வழங்கிய வண்ணம் உள்ளனர். திங்கள்கிழமை மட்டும் மாவட்டம் முழுவதும் இருந்து 500-க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்திருந்தனர்.

பருத்தி: கனமழைக்கு பருத்தி பயிர்கள் பெரும்பகுதி சேதமாகியுள்ளன. சில்லாரஹள்ளி, பூஞ்சோலை நகர், அண்ணாநகர், பாரதி நகர், இந்திரா நகர், நடூர், புளியம்பட்டி, தேக்கல்நாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களில் மட்டும் ஆயிரம் ஏக்கருக்கு மேல் பருத்தி பயிர்கள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன. காய் வெடித்து பருத்தி வருவதற்கு பதிலாக, காய் வெடித்து அதனுள்ளேயே மழைநீர் தேங்குவதால் புதிதாக நாற்று வளரத் தொடங்கியுள்ளது. விளைச்சல் வீணாகி ஏக்கருக்கு | 30 ஆயிரம் முதல் 45 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

மரவள்ளி கிழங்கு: கடத்தூர், வெங்கடம்பட்டி, மாதேமங்கலம், அதகப்பாடி, ஏர்ரபைனஹள்ளி, நல்லாம்பள்ளி மட்டுமின்றி மாவட்டம் முழுவதும் பரவலாக மரவள்ளி கிழங்கு பயிரிட்ட விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். கிழங்குகள் அனைத்தும் மண்ணுக்குள்ளேயே அழுகிவிட்டன. சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் மரவள்ளிகிழங்கு சேதமிருக்கும் என்கின்றனர்

விவசாயிகள். இதேபோல், மஞ்சள், வெற்றிலை, அவரை, துவரை, சோளம், ராகி ஆகியவை பயிரிட்ட விவசாயிகளும் மழையால் இழப்பு ஏற்பட்டுள்ளதாக நிவாரணம் கோரியுள்ளனர்.

இதுகுறித்து, வேளாண்மை இணை இயக்குநர் சி. துரைசாமி கூறுகையில், தருமபுரி மாவட்டத்தில் மொரப்பூர் ஒன்றியத்துக்குள்பட்ட கிராமங்களில் இருந்து மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிர் சேதம் குறித்து மனுக்கள் அளித்துள்ளனர். இதர ஒன்றியங்களில் இருந்து குறைந்த எண்ணிக்கையிலேயே மனுக்கள் வந்துள்ளன. வரும் 9, 10-ம் தேதிகளில் விவசாயிகள் குறிப்பிட்டுள்ள பகுதிகளைப் பார்வையிட்டு மொத்தமாக பயிர் சேத விவரங்கள் தயாரிக்கப்படும். 50 விழுக்காடுக்கும் அதிகமாக சேதமடைந்த பயிர்களுக்கு அரசிடம் நிதி ஒதுக்கீடு பெற்று இழப்பீடு வழங்கப்படும் என்றார்.

**61,447 ஹெக்டேர் பயிர்கள் சேதம்**

First Published : 07 Dec 2010 01:55:35 PM IST

பாபநாசம், டிச. 6: தொடர் மழை காரணமாக தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டத்தில் இதுவரை 61,447 ஹெக்டேர் சம்பா, தாளடி நெல் பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளன என்றார் பாபநாசம் வட்டாட்சியர் கே. சக்திவேல்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

பாபநாசம் வட்டத்திலுள்ள பாபநாசம், அம்மாபேட்டை ஒன்றியப் பகுதிகளில் குடிசை வீடுகளில் 1,079 பகுதியாகவும், 25 முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. இதோடு, 41 ஓட்டு வீடுகள், 5 தொகுப்பு வீடுகள் என மொத்தம் 1,150 வீடுகள் சேதமடைந்துள்ளன.

மேலும், 55 கால்நடைகள் இறந்துவிட்டன. சுவர் இடிந்து இருவர் உயிரிழந்தனர். 61,447 ஹெக்டேர் சம்பா, தாளடி நெல் பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீரை வெளியேற்றும் பணி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து, சேத மதிப்பீடுகள் கணக்கெடுக்கப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

**தேயிலையில் கொப்புள நோய்: மகசூல் குறைந்ததால் விவசாயிகள் விரக்தி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,01:08 IST

குன்னூர்: நீலகிரியில் நிலவும் காலநிலை மாற்றம், பனி மூட்டத்தால் தேயிலை செடிகளில் கொப்புள நோயின் தாக்குதல் துவங்கியுள்ளது; மகசூல் குறைந்து, தேயிலை தூள் உற்பத்தி குறைய துவங்கியுள்ளதால் விவசாயிகளின் வருமானத்தில் அடி விழ துவங்கியுள்ளது. நீலகிரியில் பல ஆயிரக்கணக்கான எக்டர் நிலப்பரப்பில் தேயிலை சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது; குன்னூர், கோத்தகிரி, குந்தா பகுதிகளில் பெருமளவு தேயிலை சாகுபடி செய்யப்படுகிறது.

தேயிலை செடிகளின் வளர்ச்சிக்கு சூரிய ஒளி, மழை, குளிர் என அனைத்து காலநிலைகளும் தேவையானதாக உள்ளது. கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் நீலகிரியில் சூரிய தரிசனம் மிகக் குறைந்த மணி நேரங்கள் மட்டுமே இருந்தன; சராசரியாக ஒரு நாளைக்கு குறைந்து 3 மணிநேரம் மட்டுமே சூரிய வெளிச்சத்தை பார்க்க முடிந்தது என உபாசி ஆய்வு கூறுகிறது; சராசரி நிலவரம் இவ்வாறு இருந்தாலும், பல நாட்களில், சூரிய ஒளி வெளிச்சம் மண்ணில் விழவே இல்லை. இரவு நேரங்களில் மழை, பகல் நேரத்தில் பனி மூட்டத்துடன் கூடிய கடுங்குளிர், மீண்டும் மாலையில் மழை என காலநிலை மாற்றத்தால் தேயிலைச் செடிகளின் இயல்பான வளர்ச்சி வெகுவாக பாதித்தது. போதிய சூரிய ஒளி இல்லாமை, பனி மூட்டம் காரணமாக தேயிலைச் செடிகளில் கொப்புள நோய் தென்படத் துவங்கியுள்ளது.

இளம் தண்டுப்பகுதி மற்றும் இளம் இலைகளை இந்நோய் தாக்குகிறது. தேயிலைச் செடிகளை கொப்புள நோய் தாக்கத் துவங்கியுள்ளதால், மகசூல் குறைந்து, தேயிலை உற்பத்தியும் குறையத் துவங்கியுள்ளது. உபாசி வேளாண் அறிவியல் நிலைய கணக்கெடுப்பின் படி, ஊட்டியில் 39 சதவீதம், குன்னூரில் 17, குந்தாவில் 43, கோத்தகிரியில் 31, கொலக்கம்பையில் 16 சதவீத பரப்பளவுள்ள தேயிலை தோட்டங்களில் கொப்புள நோய் தென்படுகிறது. ""கடந்தாண்டு அக்டோபர் மாதம் 1.25 லட்சம் கிலோ தேயிலை தூள் உற்பத்தி செய்யப்பட்டது; கொப்புள நோய் தாக்குதலால், இந்தாண்டு, 10 சதவீத உற்பத்தி குறைந்துள்ளது. அதே போன்று கடந்தாண்டின் நவம்பர் மாத உற்பத்தியை விட இந்தாண்டு, 12 சதவீதம் குறையும்," என நிர்வாக இயல் ஆலோசகர் சுந்தர் கூறினார். விவசாயிகள் குமுறல்: எல்லநள்ளி பகுதியை சேர்ந்த தேயிலை விவசாயி மூர்த்தி கூறுகையில், ""கொப்புள நோயை கட்டுப்படுத்த, மழையில்லாத போது மட்டுமே மருந்து தெளிக்க முடியும்; கடந்த இரு மாதமாக தொடர்ச்சியாக மழை பெய்ததால் மருந்து தெளிக்க

முடியவில்லை; தவிர, மருந்துகளின் விலையும் பன்மடங்கு அதிகரித்துவிட்டது; கூலியாட்களுக்கு தினசரி 200, 300 ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது," என்றார். குன்னூரை சேர்ந்த விவசாயி சிவக்குமார் கூறுகையில், ""தற்போது, தரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வரும் நிலையில், கொப்புள நோய் தாக்கிய பசுந்தேயிலையை வாங்க பல தொழிற்சாலைகள் தயக்கம் காட்டுகின்றன.
சில சமயங்களில், உற்பத்திக்கு தேவையான பசுந்தேயிலை பற்றாக்குறையாக இருக்கும் பட்சத்தில், கொப்பு நோய் தாக்கப்பட்ட பசுந்தேயிலையை கொண்டு தேயிலை தூளை உற்பத்தி செய்வதன் மூலம் தேயிலை தூளின் தரம் குறையும் வாய்ப்பு உள்ளது; வரும் நாட்களில் கொப்புள நோயின் தாக்குதல் அதிகரிக்கும்; இதன் மூலம் மகசூல் குறையும்," என்றார்.  "அதிக சேதத்தை ஏற்படுத்தும்'  "தேயிலையில், 507 வகை பூஞ்சான நோய்கள் கண்டறியப்பட்டுள்ளன; வேர், தண்டு மற்றும் இலைப் பகுதிகளை தாக்கும் பூஞ்சான நோய்கள், பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தும் நோய்கள் என 15 வகை நோய்கள் மிக அதிக சேதத்தை ஏற்படுத்தும் நோய்களாக பட்டியலிடப்பட்டுள்ளன; இதில், மிக அதிக சேதத்தை ஏற்படுத்துவது கொப்புள நோய் தான்; தாக்குதலின் விகிதத்திற்கு ஏற்ப 50 சதவீதம் வரையில் மகசூல் இழப்பு ஏற்படும். தாக்குதல் விகிதம் அதிகமுள்ள மாவட்டங்களில் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த மொத்த சாகுபடிக்கான செலவில் ஏக்கருக்கு 2,000 ரூபாய் வரை செலவிடப்படுகிறது,' என உபாசி வேளாண் அறிவியல் நிலையம் தெரிவித்துள்ளது.

### அழுகிய பருத்தி செடியுடன் விவசாயிகள் திருச்சி கலெக்டர் அலுவலகம் வருகை

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,02:58 IST

திருச்சி: திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் நாள் கூட்டம் நடந்தது. கலெக்டர் மகேசன்காசிராஜன் தலைமை வகித்து, புகார்களை பெற்றார். டி.ஆர்.ஓ., ராமன் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலை வகித்தனர்.மண்ணச்சநல்லூர் அருகே திருப்பட்டூரைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் வந்து கலெக்டரிடம், மழையால் தங்கள் பகுதியில் ஏராளமான பருத்தி, மிளகாய், வெங்காயம், கொத்தமல்லி பயிர்கள் அழுகிவிட்டதாக தெரிவித்து நிவாரணம் கோரி மனு அளித்தனர். அவர்கள் அழுகிய பருத்தி செடியை கையில் ஏந்தி வந்தனர்.

விவசாயிகள் கூறுகையில், ""திருப்பட்டூர் பகுதியில் 250 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட மிளகாய், பருத்தி, கொத்தமல்லி, வெங்காயம் போன்ற பயிர்கள் அழுகிவிட்டன. அருகில் உள்ள கிராமங்களில் வி.ஏ.ஓ., கணக்கெடுத்தார். எங்கள் கிராம வி.ஏ.ஓ., இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உடனடியாக அதிகாரிகள் எங்கள் பகுதியில் சேதமடைந்த பயிர்களை பார்வையிட்டு, உரிய நிவாரணம் வழங்க வேண்டும்," என்றனர்.

* வீடு சீரமைத்து தர கோரிக்கை: மணப்பாறை அருகே முகவனூர், பெரியகுளத்துப்பட்டியில் அருந்ததியர் காலனி உள்ளது. இங்கு 20 குடும்த்தினர் 20 ஆண்டாக வசிக்கின்றனர். மார்ட்டின் ஜெகதீஸன் தலைமையில் 10 பேர் நேற்று கலெக்டரிட் மனு அளித்தனர். அதில்,""மழையால் அனைத்து வீடுகளும் கடுமையாக சேதமடைந்துள்ளது. மேற்கூரை மிகவும் சேதமடைந்து, தண்ணீர் இறங்குகிறது. இரவு நேரங்களில் குழந்தைகளுடன் தூங்குவதுக்கு அச்சமாக உள்ளது. எனவே, வீட்டை சரி செய்து தரவேண்டும்," என கூறப்பட்டுள்ளது.

* கோவில் வழிபாட்டு தடை நீக்க கோரிக்கை: தொட்டியம், காட்டுப்புத்தூர், தவிட்டுப்பாளையத்தைச் சேர்ந்த மக்கள் அளித்த மனுவில், ""மூன்றாவது வார்டில் 80 ஆண்டுகளாக பகவதியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு முன்புறம் குடிநீர் கிணற்றை முன்னாள் அமைச்சர் கக்கன் திறந்து வைத்தார். காட்டுப்புத்தூர் - உன்னியூர் வழியில் கோவில் உள்ளது. திடீரென இந்த கோவிலை அகற்ற வேண்டும் என்று பஞ்சாயத்து நிர்வாகம் கூறுகிறது. தென்புறம் உள்ள கோவிலுக்கு சொந்தமான இடத்தை எடுத்துக் கொண்டு கோவிலை வழிபாடுக்கு விட வேண்டும்," என கூறப்பட்டுள்ளது.

* "பெல்' எழில்நகர், குறிஞ்சிநகர் உள்ளது. இங்கு அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மூலம் குளம் அமைக்கப்பட்டது. மழையால் குளம் நிரம்பி வழிந்து, குடியிருப்பு பகுதிக்குள் தண்ணீர் புகுந்து விட்டது. அதை அகற்றி, குளத்தை ஆழப்படுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கலெக்டரிடம் மனு அளித்தனர்.

**விளைநிலங்களில் வாத்து மேய்க்கும் பிரச்னை:விவசாயிகள்-ஊராட்சி நிர்வாகம் மோதலால் பரபரப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,01:48 IST

மடத்துக்குளம்: விளைநிலங்களில் வாத்து மேய்ப்பது குறித்து விவசாயிகளுக்கும், ஊராட்சி நிர்வாகத்துக்கும் தொடர்ந்து ஏற்பட்டு வரும் மோதல்களால் கடத்தூர் கிராமத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. மடத்துக்குளம் அருகேயுள்ள கடத்தூர் அமராவதி பழைய ஆயக்கட்டு பகுதியில் ஆயிரத்து ஐநூறு ஏக்கருக்கு மேல் நெல் விளையும் வயல்கள் உள்ளன. அறுவடை சீசன் முடியும் போது வயல்களில் நெல் தானியம் சிதறும். இந்த தானியங்கள் மற்றும் விளைநிலத்தில் உள்ள புழுக்கள் மற்றும் பூச்சிகளை பறவைகள் விரும்பி உண்ணும். இதனை அடிப்படையாக கொண்டு அறுவடைக்கு பின் மூன்று மாதங்கள் நடவு செய்யப்படாத விளைநிலங்களில் வாத்துக்களை பட்டி அமைத்து மேய்க்க விவசாயிகள் அனுமதித்து வருகிறார்கள்.

கேரளா மற்றும் இதர மாவட்டங்களிலிருந்து வாத்து மேய்ப்பவர்கள் கடத்தூர் பகுதிக்கு வந்து பல மாதங்கள் தங்கி பல ஆயிரம் வாத்துக்களை மேய்த்து திரும்புவது வழக்கம். வாத்துக்கள் விளைநிலத்தில் மேய்ப்பதற்காக குறிப்பிட்ட தொகையை வாத்து மேய்ப்பவர்கள் விவசாயிகளுக்கு வழங்குவர். இதனால், விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைத்து வந்தது. நாளடைவில், அமராவதி ராஜவாய்க்கால் விவசாயிகள் தங்கள் தேவைகளுக்காக சங்கம் அமைத்தனர். சங்கம் துவங்கிய ஆண்டிலிருந்து குறிப்பிட்ட நாளில் விவசாய சங்கம் மூலம் வாத்து மேய்ப்பதற்கு ஏலம் நடக்க தொடங்கியது. கடத்தூர் பகுதி விளைநிலங்களில் வாத்துக்கள் மேய்க்கும் உரிமைக்கு குறிப்பிட்ட தொகையை விவசாயிகள் சங்கத்தில் செலுத்தி விட்டு வாத்து மேய்ப்போர்கள் வாத்துகளை பட்டி அமைத்து வந்தனர். ஏலத்தொகை சங்கத்தின் மூலம் வாய்க்கால் பராமரிப்பு, மடை பராமரித்தல் உட்பட பல்வேறு பணிகளுக்கு செலவிடப்பட்டன.

இந்நிலையில், விவசாயிகள் சங்கத்தில் கருத்து மோதல் ஏற்பட்டு புதிய சங்கம் உருவாக்கப்பட்டது. இதனால் கடத்தூர் பகுதியில் வாத்து மேய்ப்பது குறித்து மோதல்கள் ஏற்பட்டது. இந்நிலையில்,ஏலம் நடத்துவது குறித்து கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, ஒரு தரப்பினர் ஊராட்சி நிர்வாகத்தினர் தான் ஏலம் நடத்த வேண்டும் என வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து கடந்தாண்டு கடத்தூர் ஊராட்சி நிர்வாக அலுவலகத்தில் மடத்துக்குளம் பி.டி.ஓ.,துரைசாமி முன்னிலையில் 1.35 லட்சத்துக்கு விளைநிலங்களில் வாத்து மேய்க்க ஏலம் விடப்பட்டது. இதற்கு அமராவதி ராஜவாய்க்கால் விவசாயி சங்கத்தினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து, வாத்துகளை விளைநிலங்களில் மேய்க்க விடவில்லை. இதனால் கடத்தூர் விவசாயிகளுக்கும் ஊராட்சி நிர்வாகத்துக்கும் மோதல் ஏற்பட்டது. இது குறித்து மடத்துக்குளம் போலீசார் இருதரப்பினரையும் அழைத்து சமரசம் செய்தனர்.

இந்நிலையில் இந்தாண்டும் ஊராட்சி நிர்வாகம் மூலம் ஏலம் நடத்த முயற்சிகள் செய்யப்பட்ட நிலையில், விவசாயி சங்கம் சார்பாக கடத்தூர் பகுதியில் வாத்து மேய்க்கும் உரிமை ரூ. 3 லட்சத்து 200 க்கு ஏலம் விடப்பட்டது. அதிருப்தி அடைந்த ஊராட்சி நிர்வாகத்தினர் ஊராட்சி எல்லைக்குட்பட்ட இடத்தில் வாத்துக்கள் மேய்க்கவோ பட்டி அமைக்கவோ கூடாது விளைநிலத்தில் மட்டும் வாத்துக்கள் மேய்க்க வேண்டும் என எச்சரிக்கை விடுத்தனர். இருதரப்பினருக்கும் இதனால் மீண்டும் மோதல் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. வாத்து மேய்க்கும் பிரச்னையில், தீர்வு காண வேண்டும் என்பதை வலியுறுத்தி கடத்தூர் காக்கா பொன்னு அண்ணகத்து பாசன விவசாயிகள் சங்கத்தினர் நேற்று மடத்துக்குளம் தாலுகா அலுவலகத்தில் மனு அளித்தனர். மனுவை பெற்றுக்கொண்ட தாசில்தார் லியாகத் அலி பொதுப்பணித்துறை, ஒன்றிய அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

**மழையால் அழுகும் நிலையில் விதை வெங்காயம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,02:37 IST

கோபிசெட்டிபாளையம்:கோபி வட்டாரத்தில் பெய்த தொடர் மழையால் கொங்கர்பாளையம் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்ட சிறிய வெங்காயப் பயிர்கள் அழுகும் நிலையில் உள்ளன. ஈரப்பதம் காரணமாக விதை வெங்காயத்திலும் முளைப்பு ஏற்பட்டுள்ளது. வட கிழக்கு பருவமழையால் 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கோபி வட்டாரத்தில் நவம்பர் மாதம் 550 மி.மீ., மழை பெய்தது. குறிப்பாக குன்றி மலைப்பகுதிகள், கொங்கர்பாளையம், விநோபா நகர், வாணிப்புத்தூர், டி.என்.பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் அதிக மழை பெய்தது. இரண்டு மாதத்துக்கு முன் கொங்கர்பாளையம் மற்றும் விநோபா நகரில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் வெங்காயம் பயிரிடப்பட்டது.

குன்றி, விலாங்கோம்பை மழைப்பகுதிகளில் பெய்த மழை காரணமாக குண்டேரிப்பள்ளம் அணை நிரம்பியது. குன்றி அடிவாரப் பகுதிகளான கொங்கர்பாளையம் மற்றும் விநோபா நகரில் மழை மற்றும் குளிர்ந்த சீதோஷ்ண நிலை நீடித்து வருகிறது. மேலும் தண்ணீர் தேங்கி நின்றதால் பயிரிடப்பட்ட வெங்காய பயிர்களில் முளைப்பு திறன் குறைந்தது. மூன்று தினங்களாக கோபி வட்டார பகுதிகளில் மழையின் தீவிரம் குறைந்துள்ளது. வானம் மேக மூட்டமாக இருந்தாலும், விவசாயப் பணிகள் மெதுவாக துவங்கியுள்ளது.

விவசாயிகள் கூறியதாவது: தொடர் மழையால் கொங்கர்பாளையம், விநோபா நகர் பகுதிகளில் மழையால் பாதிக்கப்பட்ட வெங்காய பயிருக்கு உரமிடும் பணி நடக்கிறது. முளைப்பு திறன் குறைவாக உள்ள வெங்காய பயிர்களுக்கு உரமிட்டாலும் எதிர்பார்த்த விளைச்சல் இருக்க வாய்ப்பில்லை என்பதால், புதிதாக வெங்காயம் பயிரிட சில விவசாயிகள் பணிகளை துவங்கியுள்ளனர். ஒரு மாதமாக குளிர்ந்த சீதோஷ்ண நிலை இருந்ததால், விதை வெங்காயமும் முளைக்கத் துவங்கி விட்டது. முளைத்த வெங்காயத்தை கொண்டு பயிரிட முடியாது. கடந்த சீஸனில் விதை வெங்காயம் ஒரு கிலோ 12 ரூபாய் வரை விலை கிடைத்தது. தற்போது 20 ரூபாயை தாண்டி விட்டது. அதிக விலை கொடுத்தாலும் கோபி மொடச்சூர் சந்தை மற்றும் அந்தியூரில் விதை வெங்காயம் விற்பனை அதிகளவில் இல்லை. முளைத்த விதை வெங்காயத்தை நீக்கி விட்டு, முளைக்காத விதை வெங்காயத்தை பயிரிட தரம் பிரிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.உற்பத்தி குறைவால் வெளிமார்கெட்டில் ஒரு கிலோ சிறிய வெங்காயம் 25 முதல் 30 ரூபாய் வரை விற்பனையாகிறது. விதை வெங்காயத்துக்கும் கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

நிலையற்ற மஞ்சள் விலை விவசாயிகள் குழப்பம்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,02:43 IST

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் மஞ்சள் விலை ஏற்ற இறக்கத்துடன் காணப்படுவதால் விவசாயிகள் குழப்பமடைந்துள்ளனர். ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் இரு ஆண்டுகளாக மஞ்சள் விலை அதிகரித்த வண்ணம் உள்ளது. நடப்பாண்டு துவக்கத்தில் இருந்து ஒரு குவிண்டால் 14 ஆயிரத்து 500 ரூபாய் வரை விற்கப்பட்டது. சில வாரங்களுக்கு முன் மஞ்சள் வரத்து குறைந்ததால் திடீரென குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் வரை அதிகரித்து, 16 ஆயிரத்து 650 ரூபாய் வரை விற்பனையானது. விலை உயர்வு காரணமாக மஞ்சள் மூட்டைகள் வரத்து திடீரென அதிகரித்தது.

சென்ற வாரம் ஒரு நாளில் 10 ஆயிரம் மூட்டைகள் வரை வரத்தானது. மஞ்சள் வரத்து அதிகரித்ததன் எதிரொலியாக மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 800 ரூபாய் வரை மீண்டும் குறைந்தது. நவம்பர் 27ம் தேதி விரலி ஒரு குவிண்டால் 16 ஆயிரத்து 638 ரூபாய், கிழங்கு ஒரு குவிண்டால் 16 ஆயிரத்து 727 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நேற்று முன்தினம் விரலி ஒரு குவிண்டால் 15 ஆயிரத்து 955 ரூபாய், கிழங்கு ஒரு குவிண்டால் 15 ஆயிரத்து 989 ரூபாய்க்கும், நேற்று விரலி ஒரு குவிண்டால் 16 ஆயிரத்து 109 ரூபாய், கிழங்கு ஒரு குவிண்டால் 16 ஆயிரத்து 269 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. மஞ்சள் விலை திடீரென உயர்வதும், திடீரென குறைவதுமாக இருப்பதால், விற்பனைக்கு மஞ்சளை கொண்டு செல்வதா? வேண்டாமா? என விவசாயிகள் குழப்பமடைந்துள்ளனர். மஞ்சள் கொண்டு வருவது குறைந்து விட்டதால் நான்கு மஞ்சள் மார்க்கெட்டுக்கும் 2,000 மூட்டைகள் வரை வரத்தாகிறது.

விவசாயிகள் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் நடப்பாண்டு பயிரிடப்பட்ட மஞ்சள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இன்னும் ஓரிரு வாரங்களில் அறுவடைப் பணி துவங்கினால், ஜனவரி முதல் வாரத்தில் புது மஞ்சள் வரத்து துவங்கி விடும். மஞ்சள் சீஸன் துவங்கும் நேரத்தில் விலை குறைய வாய்ப்பு உள்ளது. இருப்பு வைக்கப்பட்டுள்ள மஞ்சள் மூட்டைகள் மட்டுமே மார்க்கெட்டுக்கு வரத்தாகிறது.சென்ற வாரம் மஞ்சள் விலை உயர்ந்தது. நடப்பு வாரம் மஞ்சள் விலை குறைந்துள்ளது. வாரத்தில் முதல் நாள் மஞ்சள் விலை அதிகரிப்பதும், வாரக் கடைசியில் மஞ்சள் விலை குறைவதுமாக உள்ளது. மஞ்சள் விலை அதிகரிக்கிறதா; இல்லையா? என்பது குழப்பமாக உள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்

**வானம் பார்த்த பூமியில் சோளம் அமோக விளைச்சல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,01:51 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மானாவாரியில் விதைத்த சோளம் அமோக விளைச்சல் கிடைத்துள்ளது.
தமிழகத்தில் கடலோர மாவட்டங்களை தவிர மற்ற மாவட்டங்களில் "சொர்கம் பைகோலர்' என்ற தாவரவியல் பெயரில் அழைக்கப்படும் சோளம் பரவலாக பயிர் செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சோளம் 8 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில் ஜெகதேவி, பர்கூர், வேப்பனப்பள்ளி, போச்சம்பள்ளி, ராயக்கோட்டை, மத்தூர், ஊத்தங்கரை ஆகிய வானம் பார்த்த பூமியில் சோளம் பிரதான பயிராக சாகுபடி செய்யப்படுகிறது.

ஜூன், ஜூலை மாதத்தில் மழை பெய்யும் போது வானம் பார்த்த பூமியில் சோளம் விதைக்கப்படுகிறது. நடப்பாண்டு ஜூன் மாதத்தில் நல்ல மழை பெய்ததால், விவசாயிகள் சோளத்தை கூடுதல் பரப்பில் விதைத்தனர். தற்போது அறுவடைக்கு தயாராக உள்ள சோளம் நன்றாக விளைச்சலை தந்துள்ளது. மார்க்கெட்டுகளில் நல்ல விலை இருப்பதால் விவசாயிகள் இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
கிருஷ்ணகிரியை அடுத்த பெரியபனமுட்லு பகுதியை சேர்ந்த விவசாயி சந்திரன் கூறியதாவது:பர்கூர் சுற்றுவட்டார பகுதியில் "தலைவிரிச்சான்' எனப்படும் ரகத்தை சேர்ந்த சோளத்தை விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர். இந்த ரக சோள பயிர் நோய் தாக்குதல் இல்லாததால், விவசாயிகளுக்கு விதைப்பு செலவை தவிர எந்தவித செலவும் இல்லை. தற்போது, அறுவடை செய்யும் சோளத்திற்கு உள்ளூர் மற்றும் வெளியூர் மார்க்கெட்டுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. ஒரு கிலோ சோளம் எட்டு ரூபாய்கு விற்பனையாகிறது. ஒரு ஏக்கரில் ஆயிரம் கிலோ வரை சோளம் விளைச்சலை கொடுக்கிறது. கால்நடை தீவனங்களின் கடுமையான விலையேற்றத்தால், மாற்று தீவனமாக சோளத்தட்டுகளை பயன்படுத்துகின்றனர்.

**வெண்டைக்காய் கொள்முதல் மையம் அமைக்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,02:57 IST

இடைப்பாடி: இடைப்பாடி வட்டாரத்தில் வெண்டைக்காய்க்கு நிரந்தர விலை கிடைக்க, வெண்டைக்காய் கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இடைப்பாடி தாலுகாவுக்கு உட்பட்ட இடைப்பாடி, கொங்கணாபுரம், தாதாபுரம்,

பூலாம்பட்டி ஆகிய பகுதிகளில் ஹைபிரிட் வெண்டைக்காய்கள் மிக அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது. 60 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ள வெண்டை செடிகளில் இந்த ஆண்டு உற்பத்தி அதிக அளவில் உள்ளது. கல்லுக்கடை, பூலாம்பட்டி, கோனேரிப்பட்டி, மூலப்பாதை, கொங்கணாபுரம், கச்சுபள்ளி மூலப்பாதை உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட இடங்களில் இருந்து நாள் ஒன்றுக்கு 40 டன் முதல் 50 டன் வரை வெண்டைக்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த வெண்டைக்காய்கள் கேரள, கர்நாடக மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

கடந்த வாரம் வரை ஒரு கிலோ 18 ரூபாய்க்கு விற்பனையான வெண்டைக்காய், நேற்று முன்தினம் 13 முதல் 16 ரூபாய் வரை விற்பனையாகிறது. இந்த விலை நிரந்தரமாக கிடைப்பதில்லை. எனவே, இடைப்பாடி வட்டாரத்தில் வெண்டைக்காய் கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து செட்டிமாங்குறிச்சி விவசாயி செங்கோட்டையன் கூறியதாவது: ஹைபிரிட் வெண்டைசெடி நடவு செய்த 40 நாளில் காய்ப்புக்கு வரும். ஒருநாள் விட்டு ஒருநாள் வெண்டைக்காய் பறிக்கும் போது, நான்கு மாதங்கள் தொடர்ந்து 60 பறிப்புகள் இருக்கும். வெண்டைக்காய்க்கு தகுந்த விலை நிரந்தரமாக கிடைப்பதில்லை. ஓரிரு நாட்கள் நல்ல விலை கிடைத்தாலும், திடீரென விலைச்சரிவு ஏற்படும்.விலை அடிக்கடி ஏற்றம் இறக்கமாக இருப்பதால், நஷ்டம்தான் ஏற்படுகிறது. இதை தவிர்க்க தமிழக அரசு இடைப்பாடி வட்டாரத்தில் கொள்முதல் மையம் ஏற்படுத்த வேண்டும், என்றார்.

**"எண்டோ சல்பான்' பூச்சி மருந்து தடை செய்ய விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,01:54 IST

வேலூர்: "தமிழகத்தில் "எண்டோ சல்பான்' பூச்சிக் கொல்லி மருந்தை தடை செய்ய வேண்டும்' என தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
வேலூரில் தமிழக விவசாயிகள் சங்க மாநில கொள்ளை பரப்பு செயலாளர் நந்தகோபால் நிருபர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் "எண்டோ சல்பான்' பூச்சிக் கொல்லி மருந்தை விவசாயிகள் அதிகளவு பயிர்களில் தெளித்து வருகின்றனர். குறிப்பாக முட்டை கோஸ், காளிஃப்ளவர், நூக்கல், தக்காளி, வெங்காயம், கத்திரிக்காய் மற்றும் முந்திரி, மாமரம், திராட்சை போன்ற வணிக பயிர்களில் தெளிக்கின்றனர். இந்த வகை காய்கறிகளை சாப்பிடும் பொது மக்கள் கண்டுபிடிக்க முடியாத நோய்களினால் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். சில பொது நல

அமைப்புக்கள், விவசாயிகள் சங்கங்கள் ஒன்று சேர்ந்த கடந்தாண்டு லட்சக்கணக்கான பொது மக்கள், விவசாயிகளிடம் கையெழுத்து வாங்கி மத்திய அரசுக்கு அனுப்பியது.

இதையடுத்து "எண்டோ சல்பான்' பூச்சிக் கொல்லி மருந்துக்கு தடை விதித்து மத்திய அரசு அனைத்து மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டது. விரைவில் "எண்டோ சல்பானுக்கு' தடை விதிப்பதாக தமிழக அரசு அறிவித்தது. ஆனால் அறிவிப்போடு நிற்கின்றது. இது வரை தடை விதிக்கவில்லை. தற்போது பெய்து வரும் மழை யில் விசாயிகள் தெளித்த எண்டோ சல்பான் மருந்து குடி நீரில் கலந்து மாசுபட்டுள்ளது. இந்த குடி நீரை குடிக்கும் பொது மக்களுக்கு பலவிதமான நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். இனியும் கால தாமதம் செய்யாமல் தமிழக அரசு தடை விதிக்க வேண்டும்.

"எண்டோ சல்பானுக்கு' பதில் "சைபர் பெக்ரீன்', "இமிடா குளோரைடு' போன்ற மருந்துகளை பயிர்களுக்கு தெளிக்கலாம். இது குறித்து பொது மக்கள், விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பொது நல அமைப்புக்கள் முன் வர வேண்டும். தடை செய்ய தவறினால் அனைத்து பொது நல அமைப்புகள், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் ஒன்று சேர்ந்து மாநில அளவில் விரைவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**மானாவாரி பருத்தி விதைப்பு தொழில்நுட்பங்கள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,00:00 IST

பருத்தியில் வேரழுகல் நோய், வாடல் நோய், இலைக்கருகல் நோய் என பல்வேறு நோய்கள் விதை மூலம் தாக்குகின்றன. பூசண வித்துக்கள் விதையின் மேல் மற்றும் உட்புறம் தங்கியிருக்கின்றன. விதை முளைக்கும்போது பூசண வித்துகளும் முளைத்து நோயினை உண்டாக்கி சேதம் விளைவிக்கின்றன. விதை மூலம் பரவும் நோய்களைத் தடுக்க விதைநேர்த்தி செய்வது அவசியம்.

* பருத்தி விதைக்கும் முன்னர் விதைநேர்த்தி செய்தல் அவசியம். ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் வீதம் சூடோமோனாஸ் புளூரசன்ஸ் என்ற உயிரியல் காரணி கொண்டு விதைப்பதற்கு சற்று முன்னர் விதைநேர்த்தி செய்ய வேண்டும்.
* சம வயதுள்ள ரகத்தை யாவரும் தேர்ந்தெடுத்து ஏக காலத்தில் (ஒரு வாரத்திற்குள்) விதைத்திட வேண்டும்.
* வயலைச் சுற்றிலும் உள்ள பூச்சிகளுக்கு மாற்றுணவாகப் பயன்படும் செடிகள், களைகளை அகற்றிச் சுத்தமாக வைக்க வேண்டும்.
* தொழு உரம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு இடுவது பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலைக்

குறைக்கும். (வேரழுகல் நோய், வாடல், நூற்புழு, தண்டுக்கூன் வண்டு, தரைக்கூன் வண்டு, வேர்ப்புழு)

* நன்மை தரும் பூச்சியான பொரிவண்டுகளின் பெருக்கத்திற்கு ஊடுபயிராக தட்டைப்பயிறு பயிரிட வேண்டும்.

* ஓரப்பயிராக ஆமணக்கு பயிரிட வேண்டும். அதன்மூலம் புரடீனியாப் புழுக்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்த முடியும். புரடீனியாப் புழுக்களின் தாய் அந்துகளைக் கவர்ந்து முட்டையிட வைக்கும். முட்டைகளும், இளம் புழுக்களும் உள்ள ஆமணக்கு இலைகளை பறித்து அழிக்க வேண்டும்.

* கிரைசோபா, குளவிகள் போன்ற நன்மைதரும் பூச்சிகளின் பெருக்கத்திற்காக ஊடுபயிராக 20 சால் பருத்திக்கு ஒரு சால் மக்காச்சோளம் பயிரிட வேண்டும்.

ந.முருகேசன், பேராசிரியர் மற்றும் தலைவர்,பருத்தி ஆராய்ச்சி நிலையம்,ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.

### இளநீர் வெட்டுவதற்கு ஒரு எளிய கருவி

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,00:00 IST




இயற்கையில் நல்ல சிறப்புகள் உடையது இளநீர் என்பதை நாம் அறிந்திருந்தாலும் நடைமுறையில் பாட்டில் பானங்கள்தான் விற்பனையில் அதிகமாக உள்ளது. இதற்கு காரணம் மக்களுக்கு இளநீர் கிடைப்பது குறைவாக உள்ளது.

உதாரணமாக 100 இடங்களில் பாட்டில் பானங்கள் கிடைத்தால், 3-4 இடங்களில்தான் நுகர்வோருக்கு இளநீர் கிடைக்கிறது. இதற்கு காரணம் இளநீர் விற்பனை செய்வதற்கு இளநீர் வெட்டும் அனுபவம்மிக்க நபர் தேவை. ஆனால் பாட்டில் பானங்கள் விற்பனைக்கு இத்தேவையில்லை. ஆகவே இத்தடையை தகர்க்க, இதோ ஓர் அற்புதமான, எளிய முறையில் முன் அனுபவமின்றி எவரும் இயக்கக்கூடிய கருவி ஒரு வரப்பிரசாதமாக உங்கள் முன்னே.

நம் இளநீருக்கு நல்ல விலை வேண்டுமென்றால், அதிகம் பேர் இளநீர் பருகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆகவே, இக்கருவியின் உதவியுடன் விற்பனைக்கூடங்களை நாம் அதிகப் படுத்தினால், இளநீர் கிடைப்பது கூடும். ஆகவே விற்பனையும் கூடும்.
காலப்போக்கில் நமது இளநீருக்கு நியாயமான விலை கிடைக்கும். ஆகவே, நீங்கள் உங்களுக்குத் தெரிந்த பாட்டில் பானங்கள் விற்கும் கடைக்காரர்கள், கேன்டீன், தியேட்டர்கள், கல்லூரிகள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள், பேருந்து நிலையம், ரயில் நிலையம், விமான நிலையம், பார்க், தீம் பார்க், பொருட்காட்சிகள், திருமண விழாக்கள், பொதுமக்கள் கூடும் பல இடங்களில் விற்பனை செய்யத் தூண்டவும் இக்கருவி பல்லாயிரக் கணக்கான வர்களுக்கு ஒரு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும். சிறிய முதலீட்டில் ஒரு நல்ல வியாபார வாய்ப்பை அமைத்துக் கொள்ள முடியும்.
நுகர்வோரும் நல்ல ஆரோக்கியமான, தரமான ஒரு பானத்தை உரிய விலையில் பெற முடியும். ஆகவே, இளநீர் பருகுங்கள், விற்பனையை அதிகமாக்கத் தூண்டுங்கள். எல்லோருக்கும் வெற்றி என்ற சூழ்நிலையை ஏற்படுத்துங்கள்.
**கருவியின் சிறப்புகள்:** இயக்குவதற்கு எளிதானது; முன் அனுபவம் தேவையில்லை; சுகாதாரமாக செயல்படக்கூடியது; சிக்கனமானது; வேகமாக செயல்படக்கூடியது; மின்சக்தி தேவையில்லை; குறைந்த முதலீட்டில் நிறைந்த லாபம்.
தொடர்புக்கு: பத்ரி, 99942 31020, பி.பிரபாகர், 99942 31090. கே.சத்தியபிரபா, உடுமலை.

**கேரட்டை தாக்கும் வேர்முடிச்சு நூற்புழு மேலாண்மை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,00:00 IST



மலைப்பகுதிகளில் பயிரிடப்படும் காய்கறிப் பயிர்களில் அதிக வைட்டமின் நிறைந்தது கேரட் பயிராகும். கேரட் கிழங்கில் அதிக அளவு வைட்டமின் ஏ மற்றும் கரேட்டின் நிறைந்துள்ளதால் அனைவராலும் விரும்பி உண்ணப்படுகிறது. **மிலாய்டோகைனி கேப்லா** என்ற இனத்தைச் சேர்ந்த வேர்முடிச்சு நூற்புழு 10-15 சதவீதம் மகசூல் இழப்பினை ஏற்படுத்துகிறது. இது வெப்பம் குறைந்த மலைப்பிரதேசங்களில் வாழும் தன்மைஉடையது.
இந்நூற்புழு வேரினுள் முழுவதுமாக உட்புகுந்து ஊசி போன்ற உணவு குழல் (அலகு) மூலம்

செல்களை துளைத்து சாற்றை உறிஞ்சி வாழ்கிறது. முதிர்ச்சிஅடைந்த ஒரு பெண் நூற்புழு 500 முதல் 1000 வரை முட்டைகளை இடும் தன்மைஉடையது. பொதுவாக நூற்புழுக்கள் கண்ணுக்கு தெரியாது. நுண்ணோக்கியின் மூலமாக மட்டுமே பார்க்க முடியும். இதனால் விவசாயிகளுக்கு எளிதில் இதன் தாக்குதலை அறிய முடிவதில்லை. இருப்பினும் கீழ்க்காணும் அறிகுறிகள் மூலம் நூற்புழுக்கள் தாக்கத்தை அறியலாம்.

**அறிகுறிகள்:**

* நூற்புழுக்கள் வேர்பகுதிகளை சேதப்படுத்துவதால் செடிகளுக்கு தேவைப்படும் நீர் மற்றும் சத்துப்பொருட்கள் தடுக்கப்படுகிறது. இதனால் செடிகளின் வளர்ச்சி குன்றி இலைகள் மஞ்சளாகவும் அதனை தொடர்ந்து காய்ந்தும் காணப்படும்.

* கேரட் கிழங்கின் மேற்பரப்பில் உண்டாகும் பக்க வேர்களில் முடிச்சுகள் (அல்லது) கழலை போன்ற அமைப்பு காணப்படும்.

* தாக்குதல் அதிகமாகும்பொழுது கிழங்குகள் இரண்டாக பிரிந்து ஒழுங்கற்ற உருவத்துடன் "கவட்டை' போன்று காணப்படும். இதனால் சந்தை மதிப்பு குறைகிறது.

* நூற்புழுக்கள் உண்டாக்கிய வேர் காயங்கள் வழியாக பூஞ்சாணங்கள் உட்புகுந்து பின்நோக்கி வாடல் நோயின் தாக்கத்தை அதிகப்படுத்துகிறது.

மேலாண்மை முறைகள்:

* கோடைகாலங்களில் ஆழ உழவு செய்து நிலத்தை 1-2 மாதங்களுக்கு தரிசாக விடுதல்.

* தொழு உரம், மண்புழு உரம், கம்போஸ்ட் மற்றும் பசுந்தாள் உரம் போன்றவற்றை தேவைக்கேற்ப இடுதல்.

* உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா போன்றவைகளை தலா **2 கிலோ/எக்டர்** என்ற அளவில் விதைகள் நடுவதற்கு முன் இடுதல்.

* சூடோமோனாஸ் புளூரசன்ஸ் என்னும் பயிர் ஊக்கி பாக்டீரியாவை 2.5 கிலோவை 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து ஒரு எக்டருக்கு இடுதல்.

* கேந்தி (எ) செண்டு மல்லியை ஊடுபயிராக பயிர் செய்வதால் வேர்களில் இருந்து உண்டாகும் வேதிப்பொருள் நூற்புழுக்களை கவர்ந்து அழிக்கிறது.

* கேரட்டை தொடர்ந்து பயிர்செய்யாமல் முள்ளங்கி, ஸ்பினாச், பார்லி, கோதுமை மற்றும் பசுந்தாள் உரப்பயிர்களுடன் பயிர் சுழற்சி செய்தல்.

* நூற்புழுக்கள் அதிகமுள்ள வயல்களில் கார்போபியூரான் 3 சத குருணை மருந்தினை எக்டருக்கு 33 கிலோ இடுதல்.

மேற்கண்ட முறைகளை கடைபிடிப்பதன் மூலம் கேரட்டை சேதப்படுத்தும் நூற்புழுக்கள் மற்றும் மண் மூலம் உண்டாகும் நோய்களையும் கட்டுப்படுத்தி தரத்துடன் கூடிய அதிக மகசூலை பெறலாம்.பா.வெற்றிவேல்காளை மற்றும் ஜே.சுரேஷ்,தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்,தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்,கொடைக்கானல்-624 103.

**பணப்பயிரான பருத்தியில் நுண்ணூட்டச்சத்து மேலாண்மை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,00:00 IST



பருத்தி ஒரு பணப்பயிராகும். பரிந்துரைப்படி உரமிட்டு பூச்சி நோய் கட்டுப்பாடு முறைகளை மேற்கொண்டால் வருமானம் அதிகம் தரக்கூடிய பயிர். ஆனால் உரமிடுவதில் சரியான முறையை பின்பற்றாவிடில் குறிப்பாக நுண்ணூட்டம் உரமிடுவதில் கவனம் செலுத்தாவிட்டால் அதிக மகசூல் இழப்பு ஏற்படக்கூடிய சூழல் ஏற்படும். மக்னீசியம் போன்ற நுண்ணூட்டச்சத்து குறைபாடு ஏற்பட்டால் ஆரம்ப நிலையில் இலைகள் முதிர்ச்சி அடையாமல் காய்ந்து உதிர்ந்துவிடும். இக்குறைபாடு முதிர்ச்சியற்ற நிலையில் இலைகள் செந்நிறம் அடைந்துவிடும். அடி இலைகள் ஊதா கலந்த சிவப்பு நிறமாகவும், இலை நரம்புகள் பச்சையாக தெளிவாகவும் காணப்படும். இக்குறைபாட்டினை நீக்க விதைப்பதற்கு முன் மக்னீசியம் சல்பேட் 10-20 கிலோ/ஏக்கர் என்ற அளவில் இட்டு பருத்தியை விதைப்பு செய்ய வேண்டும். பருத்தியில் காய்கள் உருவாகும்போது இந்த அறிகுறிகள் தென்பட்டால் மக்னீசியம் சல்பேட் 10-20 கிலோ/ஏக்கர் அல்லது 2% மக்னீசியம் சல்பேட் கரைசலை தெளிக்க வேண்டும். அல்லது ஒரு லிட்டர் தண்ணீரில் 20 கிராம் மக்னீசியம் சல்பேட்டுடன் 10 கிராம் யூரியா கலந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். சுண்ணாம்புச்சத்து அதிகமுள்ள மண்ணிலும் மணிச்சத்து, சாம்பல்சத்து உரங்களை அதிகமாக இடுவதாலும் இக்குறைபாடு ஏற்படுகிறது என்று விநாயகபுரம் நீர் மேலாண்மை பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் எஸ்.ஐ.காதிரி கேட்டுக் கொள்கிறார். எஸ்.ஐ.காதிரி, வேளாண்மை துணை இயக்குனர்,நீர் மேலாண்மை பயிற்சி நிலையம்,விநாயகபுரம், மதுரை.

**நவீனதொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,00:00 IST

மரக்கழிவுகளையும் காசாக்கும் உயிரி எரிக்கட்டி: உயிரி எரிக்கட்டிகளைத் தயாரிக்கும் வழிமுறைகள் மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி

**கா.ந.பார்த்திபன்** செயல்படுத்தி வருகிறார். வேளாண் சார்ந்த கழிவுப்பொருட்கள், மரத்தூள், காப்பி தொலிகள், கடலைத் தொலிகள் இவைகளில் ஒன்றையோ, பலவற்றையோ அச்சுகளில் அழுத்தம் செய்யும் இயந்திரங்கள் மூலம் உயிரி எரிக்கட்டிகளை தயாரிக்கலாம்.
உயிரி எரிக்கட்டிகள் நிலக்கரிக்கு அடுத்த நிலையில் வெப்பத்திறன் கொண்டவை. வெப்பத்தை உற்பத்தி செய்வதற்காக நிலக்கரி மற்றும் மரம் போன்ற எரிபொருட்களைப் பயன்படுத்தும் இடங்களில் உயிரி எரிக்கட்டிகளை உடனடியாக பயன்படுத்தலாம். இன்றைக்கு அதிகரித்துள்ள சூழல் விழிப்புணர்வு, உலக வெப்பமயமாதல் போன்ற நிலைகளில் மரங்கள் வெட்டுவதைத் தடுக்க முயற்சிகள் எடுத்துவரும் சூழலில் உயிரி எரிக்கட்டிகளைத் தயாரிப்பது அவசியமாகிறது. இந்த தொழில்நுட்பத்தில் கந்தகம் இன்னும் பிற வேதிப்பொருட்கள் இல்லாததால் இவை சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்றவை. மற்ற எரிபொருட்களில் உருவாகும் சாம்பலைவிட எரிக் கட்டிகள் உருவாக்கும் சாம்பலின் அளவு 2.5 சதம் குறைந்த கார்பனை உள்ளடக்கியவை. இவை நிலக்கரியைவிட அடர்த்தி மிகுந்தவை.
உருளை வடிவமாக ஒரு அடி, அரை அடி உள்ளதால் எரியூட்டுவதற்கு இது எளிதானது. இத்தொழில் நுட்பத்தை வணிக நோக்கில் மேற்கொள்ள குறைந்த முதலீடு போதுமானது. இதற்கான இடம், இயந்திரச்செலவு உட்பட முழு அமைப்பையும் உருவாக்க 13.5 லட்சம் செலவாகும். இந்த தொழில்நுட்பம் மூலம் ஒரு மணி நேரத்திற்கு 250 கிலோ எரிக்கட்டிகளைத் தயாரிக்கலாம். சவுக்கு மரக்கழிவுகள், மரத்தூள், தீக்குச்சி மரக்கழிவுகள், கடலைத் தொலி, காப்பித்தொலி ஆகியவற்றைக் கச்சாப்பொருளாகக் கொண்டு இதனைத் தயாரிக்கலாம்.
வரவும் செலவும்: 1 மணி நேரத்திற்கு 250 கிலோ எரிக்கட்டி தயாரிக்க ஆகும் மொத்த செலவு 13.5 லட்சமாகும். மரத்தூள், சவுக்கு, தீக்குச்சி மரக்கழிவுகளிலிருந்து எரிக்கட்டிகள் தயாரித்தல் ஒரு டன்னுக்கு முறையே சுமார் ரூ.1420, ரூ.1762, ரூ.964 லாபம் கிடைக்கும். குறைந்துவரும் பெட்ரோலியம் சார்ந்த எரிபொருள் வளம், அதிகரித்துவரும் சுற்றுச்சூழல் விழிப்புணர்ச்சி ஆகியன உயிர்ப்பொருள் சார்ந்த எரிபொருட்களுக்கு அதிக முக்கியத்துவத்தை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பாக மரக்கழிவுகளின்மூலம் தயாரிக்கப்படும் எரிக்கட்டிகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அதற்குரிய தொழில்நுட்பங்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டு பயனாளிகளுக்கு பயிற்சிகள் மூலம் வழங்கி, இந்த எரிக்கட்டி உற்பத்தியை அதிகரிக்க பெரும்பங்காற்றி வருகிறது.
இதுபோன்ற மறு சுழற்சி ஆற்றல் மூலங்களான உயிரி எரிக்கட்டிகள்தான் எதிர்கால மக்களுக்கான எரிபொருளாகும். மேலும் விபரங்களுக்கு, "முதன்மையர் (வனவியல்), வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம்-641 301, தொலைபேசி: 04254-222 010'.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 08,2010,00:00 IST

உளுந்து NUL7: நிர்மல் சீட்ஸ் நிறுவனம் வழங்கும் இந்த உளுந்து ரகம் வறட்சியிலும் திரட்சியான மணிகளை கொண்டுள்ளது. மேலும் விபரங்களுக்கு **- நிர்மல் சீட்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் (94437 09543); விஸ்வா பார்ம்ஸ், கோவில்பட்டி (94433 17608), பி.ஆர்.அக்ரோ சர்வீஸ், திருநெல்வேலி (98422 23390).**
நிர்மல்-7 (விஸ்வாஸ்) ஒரு குறுகிய காலப்பயிர், அதிக கிளைகள் கொண்டது. குத்துச்செடி வகை, குறைந்த இலைகள், அதிக காய்கள், அதிக மகசூல் தரவல்லது. மாசிப்பட்டத்திற்கு ஏற்றது. நடுத்தர மற்றும் கடினமான மண் உகந்தது. விதை அளவு 5 முதல் 6 கிலோ/ஏக்கர். ஆடிப்பட்டம், கார்ப்பருவத்திற்கு ஏற்றது. **15 ஜூன் முதல் 15 ஜூலை** வரை விதைப்பு. கோடை காலம் 15 ஜனவரி முதல் 15 பிப்ரவரி விதைப்பு. இடைவெளி 40 x 15 செ.மீ. உர அளவு எக்டருக்கு தழைச்சத்து 20 கிலோ, மணிச்சத்து 40 கிலோ, சாம்பல் சத்து 40 கிலோ.

**தமிழக வேளாண்மைத் துறையின் புதிய இணையதளம்:** தமிழக அரசின் வேளாண்மைத்துறையும், தகவல் தொழில்நுட்பத் துறையும் இணைந்து அக்ரிஸ்நெட் (Agrisnet) என்ற புதிய இணையதளத்தை உழவர் பயன் பாட்டுக்காக உருவாக்கியுள்ளனர். இந்த இணையதளத்தை ஜூலை 27 அன்று தமிழக அரசின் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பூங்கோதை தொடங்கி வைத்துள்ளார். (www.tnagrisnet.in.gov.in).

ரவுண்டப் ரெடிபிளக்ஸ் போல்கார்டு-2 என்ற பெயருடன் சந்தைக்கு வரப்போகும் பருத்தி ரகமானது மூன்று வகையான காய்ப்புழுக்களைத் தாங்கி வளரும் தன்மை கொண்டது. அனைத்து புல் பூண்டுகளையும் சுருக்கி அழியச் செய்யும் வீரிய களைக் கொல்லியான "ரவுண்டப்' இந்த பருத்திச்செடியை ஒன்றும் செய்யாது. அதாவது பருத்தியை விதைத்துவிட்டுஅந்த வயலில் வீரிய களைக்கொல்லியான "ரவுண்டப்' தெளித்தால் மற்ற அனைத்து புல் பூண்டுகளும் அழிந்துபோகும். ஆனால் போல்கார்டு-2 பருத்தி மட்டும் அதைத் தாங்கி வளரும். விவசாயிகளுக்கு களை எடுக்கும் செலவு குறையும்.

"பிடி' பருத்தி வந்தபின்தான் பூச்சிக்கொல்லியின் பயன்பாடு குறைந்திருக்கிறது. அதனால்தான் பெரும்பாலான விவசாயிகள் இதனை ஆதரிக்கிறார்கள். பிடி கத்திரி மற்றும் பருத்தியால் மனிதர்களுக்கு எந்தத் தீங்கும் இல்லை. சுற்றுச்சூழல் பாதிப்பும் இல்லை என்று நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் அக்டோபர் 28ம் தேதியன்று பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற புதியரக பிடி பருத்தி பற்றிய விளக்கக்

கருத்தரங்கில் மான்சாண்டோ நிறுவன ஆராய்ச்சிப்பிரிவின் அதிகாரி தெரிவித்துள்ளார். (தகவல்: பசுமை விகடன் 25.11.10) -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**மழையால் நிலக்கடலை விதைகள் நாசம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,23:57 IST

பள்ளிப்பட்டு : விவசாய நிலத்தில் நிலக்கடலை விதைத்த விவசாயிகள் சமீபத்தில் பெய்த மழையால் அடித்து செல்லப்பட்டதால், அவர்கள் கடும் நஷ்டம் அடைந்து பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. இதனால் அறுவடை பருவத்தில் உள்ள நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி அழுகும் நிலையில் உள்ளது. வெட்டு பருவத்தில் உள்ள கரும்பு பயிரிடப்பட்டுள்ள நிலங்களில் மழைநீர் தேங்கியுள்ளதால் கரும்புகளை வெட்டி ஆலைகளுக்கு அனுப்ப முடியாமல் விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.இதனால் குறிப்பிட்ட காலத்திற்குள் நெற்பயிர்களை அறுவடை செய்தும், கரும்புகளை வெட்டி ஆலைகளுக்கு அனுப்பி பணம் பெற்று பயனடைய வேண்டிய விவசாயிகள் இந்த தொடர் மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலியாக உள்ள விவசாய நிலங்களில் கார்த்திகை 1ம் தேதி முதல் 15 ம் தேதி வரை கார்த்திகை பட்டத்தில் நெல் மற்றும் வேர்க்கடலை விதைகள் விதைக்க விவசாயிகள் தயாராக இருந்தனர். கடந்த 10 நாட்களாக தொடர்ச்சியாக மழை விட்டு விட்டு பெய்ததால் நெல் நாற்று விடுவதும், வேர்க்கடலை விதை விதைப்பதும் தடைபட்டு வந்தது. இதையடுத்து மூன்று நாட்களாக வெயில் அடித்ததால் விவசாயிகள் ஆர்வமுடன் வேர்க்கடலை விதைகளை விதைத்தனர்.இந்நிலையில், திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை உட்பட திருவள்ளூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இதனால் வேர்க்கடலை விதை விதைத்த நிலங்களில் மழை நீர் குளம் போல் தேங்கியது. இதனால் வேர்க்கடலை விதைகள் முளைக்காமல் மழைநீரில் அடித்து செல்லப்பட்டன. இதனால் விவசாயிகள் வேதனையுடன் உள்ளனர்.

**நெற்பயிர்களுக்கு நிவாரணம் வழங்க முதல்வருக்கு கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,21:16 IST

பரங்கிப்பேட்டை : பரங்கிப்பேட்டை அருகே வெள்ளத்தால் சேதமடைந்த நெற்பயிர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என துணை முதல்வருக்கு ஊராட்சி தலைவர் வனஜா கோபாலகிருஷ்ணன் கோரிக்கை வைத்துள்ளார். இதுகுறித்து அவர் துணை முதல்வர் ஸ்டாலினுக்கு அனுப்பியுள்ள மனு: பரங்கிப்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட பூவாலை ஊராட்சி

பகுதி முழுவதும் மழை, வெள்ளத்தின் போது கடுமையாக பாதிக்கப்பட்டது. பரவானாறில் இருந்து வெள்ளம் கிராமத்திற்குள் புகுந்ததில் குடிசை வீடுகள் மற்றும் 500 ஏக்கர் விவசாய நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளது. சேதமடைந்த குடிசை வீடுகள் மற்றும் நெற்பயிர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

**தொடர் மழையால் நெற்பயிர்கள் முளைத்து சேதம்: விவசாயிகள் வேதனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,23:50 IST

விழுப்புரம் : விழுப்புரம் பகுதியில் பெய்த தொடர் மழையினால் மானாவாரி விவசாயப் பகுதியிலும் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி முளைத்து சேதமாகியது. தமிழகத்தில் பெய்த வடகிழக்கு பருவமழையால் விழுப்புரம் மாவட்டத்திலும் அதிகளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் கடந்தாண்டைக் காட்டிலும் 24 சதவீதம் கூடுதல் மழை பொழிந்துள்ளது. இதனால் மாவட்டத்தில் உள்ள 80 சதவீத ஏரிகள் நிறைந்து வழிகிறது. ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் மூழ்கி முற்றிலும் சேதமடைந்துள்ளது. விழுப்புரம் அருகே உள்ள காணை, முகையூர், மயிலம் ஆகிய பகுதிகளில் மானாவாரி விவசாயம் நடந்து வருகிறது. இந்தப் பகுதியில் உள்ள ஏரிகளில் தண்ணீர் நிரம்பியுள்ளது. காணை அருகே அதிக பரப்பளவில் அமைந்துள்ள வீரமூர் ஏரி முழுவதும் நிறைந்து மழை நீர் ஆறு போல் களிங்கல் வழியாக ஒரு வாரமாக வெளியேறி வருகிறது.

மழை பாதிப்பில் ஏரி ஒட்டிய பகுதியில் உள்ள நெல்வயல்கள் மூழ்கிப்போயின. அப்பகுதியைச் சேர்ந்த விவசாயி துரைக்கண்ணு, கலியமூர்த்தி, கமலக்கண்ணன், வெங்கந்தூர் பழனி உள்ளிட்ட பல விவசாயிகளின் 50 ஏக்கர் அளவிலான நெற்பயிர்கள் மூழ்கி சேதமாகிப்போனது. ஆடி பட்டத்தில் விடப்பட்டு கடந்த மாதம் நெல் அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில் மழையினால் அறுவடை செய்யமுடியாத நிலை ஏற்பட்டது. ஒரு மாத காலம் தொடர் மழையினால் பயிர்கள் மூழ்கி கதிர்கள் நிலத்தில் சாய்ந்து தற்போது முளைப்பு ஏற்பட்டு வீணாகிப்போயுள்ளது. மழை ஓய்ந்த நிலையில் சேற்றில் முளைத்து சேதமாகிப்போன நெற்பயிர்களை விவசாயிகள் வேதனையுடன் அறுவடை செய்து கிடைத்தவரை தேற்றி வருகின்றனர்.

**உரிய காலத்தில் இலவச தீனி மூட்டைகள் வழங்காததால் விவசாயிகள் அதிருப்தி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,21:07 IST

நெல்லிக்குப்பம் : விவசாயிகளுக்கு இலவச தீனி மூட்டைகளை உரிய காலத்தில் வழங்காததால் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். தமிழகம் முழுவதும் விவசாய பயிர்களுக்கு தண்ணீர் தேவையை குறைத்து அதிக மக‹ல் பெற தமிழக அரசு சொட்டுநீர் பாசனத்தை ஊக்குவித்து

வருகிறது. கடலூர் மாவட்டத்தில் அதிக பரப்பளவில் கரும்பு பயிரில் சொட்டுநீர் பாசன முறையை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். கரும்பு வரிசைக்கு வரிசை இடைவெளியை அதிகப்படுத்துவதால் களை எடுக்கவும் அறுவடைக்கும் இயந்திரங்களை பயன்படுத்துவதால் ஆட்கள் தேவை குறைகிறது. தீனி வைக்கவும் வயலின் உள்ளே செல்ல வேண்டியதில்லை. மோட்டார் கொட்டகையிலேயே தீனியை தண்ணீரில் கரைத்து அனுப்ப முடியும். ஒரு ஏக்கரில் சொட்டுநீர் பாசனம் அமைக்க தரமான கம்பெனிகள் 40 ஆயிரம் ரூபாய் வாங்குகின்றனர்.

அரசு செலவில் 65 சதவீதம் அல்லது 14 ஆயிரத்து 500 ரூபாய் இதில் எது குறைவோ அத்தொகையை அரசு மானியமாக வழங்குகிறது. 65 சதவீதம் என்றால் 26 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். ஆனால் 14 ஆயிரத்து 500 ரூபாய் மட்டுமே மானியமாக வழங்குகின்றனர். அதேபோன்று ஏக்கருக்கு கரும்பு பயிர் துல்லிய பண்ணையம் முறையில் செய்தால் 6,000 ரூபாய்க்கு தீனி மூட்டைகள் வழங்குவதாக அரசு அறிவித்தது. நெல்லிக்குப்பம் வட்டாரப் பகுதிகளில் 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் துல்லிய பண்ணைய முறையில் சொட்டுநீர் பாசனம் அமைத்து ஒரு ஆண்டுக்கு முன் கரும்பு பயிரிட்டனர். ஆனால் இதுவரை இலவசமாக வழங்க வேண்டிய தீனி மூட்டைகள் வழங்கப்படவில்லை.

கரும்பு பயிருக்கு ஏழு மாதம் வரையே தீனி வைக்க வேண்டும். இலவச தீனி வழங்காததால் தங்கள் பணத்தை செலவு செய்து தீனி வாங்கி வைத்துள்ளனர். இனிமேல் இலவச தீனி வழங்கினாலும் அதை இம்முறை பயன்படுத்த முடியாது. அடுத்த ஆண்டுவரை தீனி மூட்டையை வீணாகாமல் பாதுகாக்க வேண்டும். இனியாவது விவசாயிகள் நலன் கருதி விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் இலவச தீனி மூட்டைகள் கிடைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கன மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள் விரைவில் கணக்கெடுக்கப்படும்: சீத்தாராமன்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,21:04 IST

கடலூர் : கன மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள் குறித்து விரைவில் கணக்கெடுக்கப்படும் என கலெக்டர் சீத்தாராமன் பேசினார். திட்டக்குடி தாலுகா அலுவலகத்தில் விவசாய பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுடன் வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து நேற்று கலெக்டர் சீத்தாரமன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட திட்டக்குடி முழுவதும் சேதமடைந்த 133 வீடுகளுக்கு தலா 5,000 ரூபாய், 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணை, வேட்டி சேலையை கலெக்டர் வழங்கிப் பேசியதாவது: கடலூர் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெடுஞ்சாலைத்துறை, நகராட்சி பேரூராட்சி மற்றும் ஊராட்சி

சாலைகளை போர்க்கால அடிப்படையில் தற்காலிகமாக சீரமைக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் கழிவு நீரை உடனடியாக அகற்றிடவும், நீர்த்தேக்க தொட்டிகளில் குளோரின் கலந்த பாதுகாப்பான குடிநீர் வழங்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. பொது மக்கள் குடிநீரை காய்ச்சி குடிக்க வேண்டும். இது குறித்து விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் வினியோகம் செய்ய வேண்டும். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனுக்குடன் நிவாரண உதவிகளை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தண்ணீரில் மூழ்கிய பயிர்கள் குறித்து விரைவில் கணக்கு எடுக்கப்படும். இவ்வாறு கலெக்டர் பேசினார். கூட்டத்தில் டி.ஆர்.ஓ., நடராஜன், இணை இயக்குனர் இளங்கோவன், விருத்தாசலம் ஆர்.டி.ஓ., முருகேசன், பி.ஆர்.ஓ., முத்தையா பங்கேற்றனர்.

**தொடர் மழையால் விவசாய சாகுபடி பாதிப்பு அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2010,22:22 IST

தேனி: தொடர் மழையால் மாவட்டத்தில் விவசாய சாகுபடி பாதிப்பு அதிகரித்து வருகிறது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். தேனி மாவட்டத்தில் பெய்த தொடர் மழையால் கம்பம், உத்தமபாளையம் பகுதியில் நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. மழையில் நனைத்த விளைந்த கதிர்கள் பல இடங்களில் முளைத்துவிட்டன. பெரியகுளம், போடி, ஆண்டிபட்டி பகுதியில் நெல் நாற்றுகள் நடவுப்பணியும் பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளன. நடவு பணி முடிந்த வயல்களில் அதிகளவு நீர் தேங்கி உள்ளன.

20 ஆயிரம் ஏக்கரில் மானாவாரி சாகுபடியான கம்பு, உளுந்து, பாசிப்பயறு, மக்காச்சோளம், துவரை, குதிரைவாலி, தினை, மொச்சை, வரகு, உளுந்து போன்ற பயிர்கள் விளைந்து அறுவடை பருவத்தில் உள்ளன.

மழைநீர் நிலத்தில் நிற்பதால், தொழிலாளர்கள் வயலில் இறங்கி வேலை செய்ய முடியவில்லை. கம்பம் பகுதியில் திராட்சை, வாழை, கீழாநெல்லி அறுவடையும், மாவட்டம் முழுவதும் தக்காளி, வெண்டைக்காய், கத்தரி, வெங்காயம் பறிக்க முடியாமல் செடியிலேயே அழுகி வருகின்றன. சில தினங்களாகவது தொடர்ந்து வெயில் அடித்தால் மட்டுமே மானாவாரி சாகுபடிகளை அறுவடை செய்ய முடியும். மழை தொடர்ந்தால் மிகப்பெரிய இழப்பு ஏற்படும் என விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

## ‘தமிழக மழை சேதத்திற்கு ரூ.2 ஆயிரம் கோடி நிதி வழங்க வேண்டும்’

### சென்னையில் திருமாவளவன் ஆர்ப்பாட்டம்

*சென்னை, டிச.8–*

*தமிழக மழை சேதத்திற்கு மத்திய அரசு ரூ.2 ஆயிரம் கோடி நிதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் தலைமையில் சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*ஆர்ப்பாட்டம்*

*தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மழை வெள்ளச்சேதத்தை சரிசெய்ய, முதற்கட்டமாக மத்திய அரசு ரூ.2 ஆயிரம் கோடி நிதி ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில், சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*மெமோரியல் ஹால் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் தலைமை தாங்கினார். மாநில செயலாளர்கள் இரா.செல்வம், பாலாஜி, மாநில செய்தி தொடர்பாளர் வன்னியரசு உள்பட பலர் கலந்துகொண்டனர்.*

*ஆர்ப்பாட்டம் குறித்து தொல்.திருமாவளவன் நிருபர்களிடம் கூறியதாவது:–*

*தொடர் மழை*

*கடந்த சில வாரங்களாக தமிழகத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. பல்வேறு மாவட்டங்களில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சுமார் 30 ஆயிரம் வீடுகள் நாசமடைந்துள்ளது. 25 ஆயிரம் வீடுகளை வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட கால்நடைகளும், சுமார் 200 பேரும் பலியாகியுள்ளனர்.*

*வெள்ளம் பாதித்த இந்த சூழ்நிலையில், இந்திய அரசு முதற்கட்டமாக ரூ.2 ஆயிரம் கோடியை ஒதுக்க வேண்டும். மேலும், வெள்ளச் சேதத்தை கணக்கிட மத்திய மந்திரி தலைமையிலான ஆய்வு குழுவையும் உடனே தமிழகத்திற்கு அனுப்ப வேண்டும்.*

*வெள்ள பாதிப்பு*

*பொதுவாக இயற்கை பேரிடர் நிவாரண நிதி 75 சதவீதம் வழங்க வேண்டும் என்ற விதி*

*முறை உள்ளது. ஆனால், மத்திய அரசு 10 சதவீதம் வரைதான் வழங்கி வருகிறது. எனவே, நிவாரண நிதியை உயர்த்தி தர வேண்டும்.*
*கடலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் வெள்ள பாதிப்பு அதிகம் உள்ளது. இதனால், வீராணம், கொள்ளிடம் போன்ற ஏரிக்கரைகளை உயர்த்த வேண்டும். தமிழக உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் 9 பேர் நியமிக்கப்பட உள்ளனர். இதற்கு, தாழ்த்தப்பட்டோர் பெயர்கள் பரிந்துரைக்கப்படவில்லை என்று தகவல்கள் வருகின்றன. எனவே, தாழ்த்தப்பட்டவர்கள் பெயரையும் இதில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு தொல்.திருமாவளவன் கூறினார்.*

## விவசாய பணிகள் தொடக்கம்




வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் பல மாவட்டங்களில் வெளுத்துக்கட்டினாலும் கோவையை பொறுத்தவரை மித மான அளவிலேயே பெய்து உள்ளது. இருப்பினும் கடந்த ஆண்டைக்காட்டிலும் கோவையில் வடகிழக்கு பருவமழை அதிகமாக பெய்து இருப்பது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளித்து இருக்கிறது. இதனால் கோவை பகுதிகளில் நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்களை விவசாயம் செய்வதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள். கோவையை அடுத்த ஆலாந்துறை அருகே ஒரு வயலில் நெல்மணிகளை விதைக்க டிராக்டர் மூலம் நிலத்தை உழுது மண்ணை பண்படுத்தும் காட்சி.